**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.196/2024 - DW-1**

| | |
|---|---|
| Name | திருமதி.ஷபினா |
| Husband Name | திரு.கவுஸ்பீர் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **23.03.2026.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

வாதி பாபுவை என் அண்ணன் சாதீக் பாஷாவுக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்று எனக்கு தெரியாது. எனக்கு வாதி பாபுவை எவ்வளவு காலமாக தெரியும் என்றால் அவரை நான் பார்த்ததே இல்லை. அவர் யார் என்று எனக்கு தெரியாது. வாதி இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிறகு விசாரித்து வாதி யார் என்று தெரிந்துகொண்டேன். வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் நான் அவரிடம் பெற்றிருந்த கடனை திரும்ப செலுத்தவில்லை என்றும், அதை வட்டியுடன் திரும்ப செலுத்த வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருந்தது என்றால் சரிதான். வாதி அனுப்பிருந்த அறிவிப்பை பெற்றதற்கு பின்பு நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கும் வரை வாதி என் கையெழுத்தை போலியாக போட்டு கடனுறுதி சீட்டு தயாரித்ததாக நான் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பு தொலைந்து போய்விட்டதால் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. இந்த வழக்கில் எனக்கு நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணை, அறிவிப்பு, செக்யூரிட்டி பாண்டு பத்திரம் மற்றும் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் G.ஷபீனா என்று கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக நான் கையெழுத்து போடும் போது G.ஷபீனா என்று தான் கையெழுத்து போடுவேன். ஷபினா பி என்று எனக்கு பெயர் உள்ளது என்றால் சரியல்ல. என் பெயர் ஷபினா ஆகும். சீக்கராஜபுரம் கிராமத்தில் கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து ஒரு மனையை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அந்த 26.07.2012 தேதியிட்ட கிரையப்பத்திரம் மூலம் தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தின் இணையதள பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4** ஆகும். அந்த ஆவணத்தில் என் பெயர் G.ஷபினா பீ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்துடன் இணைக்கப்பட்ட என்னிடம் காண்பிக்கப்படும் என்னுடைய

வாக்காளர் அடையாள அட்டை நகலில் ஷபினா பீ என்று உள்ளது என்றால் சரிதான். அது தவறாக உள்ளது. அதை திருத்தம் செய்ய மனு கொடுத்துள்ளேன். அந்த வாக்காளர் அடையாள அட்டை நகல் **வா.சா.ஆ.5** ஆகும். எனக்கு ஷபினா பீ என்ற பெயரும் உள்ளதால் தான் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியை எனக்கு நன்கு தெரியும் என்றாலும், அவரிடம் வட்டிக்கு நான் பணம் ரூ.9 லட்சம் 28.01.2024-ம் தேதி வாங்கிக்கொண்டு வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றாலும், அந்த கடனை திரும்ப செலுத்துவதிலிருந்து தப்பிப்பதற்காக என் பெயர் தவறாக உள்ளது என்றும், என்னுடைய கையெழுத்து அல்ல என்றம் நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி கோரிய படி அவருக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:-</u> இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.